[9th August 1965

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குறிப்பிலே தாசில்தார் கிரேடிலே 12 மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று இருக்கிறது. அப்படி என்றால் ஆண் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா அல்லது பெண் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அவர்களை மாற்றி பெண் அதிகாரிகளை நியமிப்பதற்கு உத்தேசம் இல்லை. இப்போது ஃபாமிலி பிளானிங் ஆபீசர்ஸ் பெண்களாகத்தான் இருக்கிறார்கள்.

மதுரை மாவட்டம் சேடப்பட்டியில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

*121 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. செ. மாதவன் :
திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர் தேர்தலின்போது போலீசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) இதைக்குறித்து, நீதி விசாரணை நடத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Two persons died.

(c) No. But a magisterial enquiry by the District Revenue Officer was held.

திரு. து. ப. அழகமுத்து : விசாரணை முடிவு பெற்றுவிட்டது என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரணை முடிவு பெற்று ரிபோர்ட் வந்து, அந்த ரிப்போர்ட்டில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சரி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நிறுவனம்

*122 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம்மாநிலத்தில் லஞ்ச ஊழல்களை விசாரிக்கத் 'தனி நிறுவனம்' (Independent Body) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are no such plans at present.